செ.வெ எண்: 829 **பத்திரிகை செய்தி** நாள்: 25/11/2016

2016-17-ம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான தடகளம், நீச்சல், கடற்கரை கையுந்து பந்து, குத்துச்சண்டை, ஃபென்சிங், ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து (handball), ஜூடோ, டேக்வோண்டோ மற்றும் பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், நாகர்கோவிலில் வைத்து நடைபெறுகிறது. கடற்கரை விளையாட்டுப் போட்டியானது பெரியக்காடு கடற்கரை மைதானத்தில் வைத்து நடைபெறும்.

25.11.2016 அன்று ஆடவர் மற்றும் மகளிருக்கான தடகளம், ஃபென்சிங், பளுதூக்குதல், ஜிம்னாடிக்ஸ், கைப்பந்து (handball) ஆகிய விளையாட்டுகளும், 28.11.2016 அன்று ஆடவர் மற்றும் மகளிருக்கான ஜூடோ, டேக்வோண்டோ, கடற்கரை கையுந்து பந்து, குத்துச்சண்டை ஆகிய விளையாட்டுகளும், 05.12.2016 அன்று ஆடவர் மற்றும் மகளிருக்கான நீச்சல் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

இதில் கலந்துக் கொள்பவர்கள் 31.12.2016 அன்று 21 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் (01.01.1996 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்). மாவட்ட அளவிலான தனி நபர்/குழுப் போட்டியில் தேர்வு செய்யப்படுபவர்கள் தமிழ்நாட்டில் குறைந்தது 5 வருடங்களாவது வசித்து வருவதற்கான புகைப்படத்துடன் கூடிய (Ration Card Xerox/Voter ID Xerox/Driving License Xerox/School Mark Sheet Xerox/ Transfer Certificate Xerox) சான்றிதழ்கள் உடன் Age Proof/ Nativity Certificate மற்றும் Student/Employee Details (I.D.Cards) வருதல் வேண்டும்.

மேலும் 05.12.2016 அன்று நடைபெறயிருந்த நீச்சல் போட்டியானது நிர்வாக காரணங்களால் 03.12.2016-க்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இச்செய்தியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமது செய்திக்குறிப்பில் தெரிவிக்கிறார்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்